# மருதக்கலிப் பாடல்களில் மகளிர் மாண்பு

ஈஸ்வரநாதபிள்ளை குமரன்,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
cumaran2004@yahoo.com

**ஆய்வுச் சுருக்கம்**

கலித்தொகை சங்க இலக்கியங்களில் ஒன்றாகும். கலிப்பாவாலான 149 பாடல்கள் இத்தொகுப்பில் உள்ளன. இவை திணையடிப்படையில் பாலைக்கலி, குறிஞ்சிக்கலி, மருதக்கலி, முல்லைக்கலி, நெய்தல்கலி என ஐந்தாக வகுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் மூன்றாவதாக அமையும் மருதக்கலியில் முப்பத்தைந்து பாடல்கள் உள்ளன. இப்பாடல்களை இயற்றியவர் மருதன் இளநாகனார். மருதத்திணைக்குரியதான ஊடலை உரிப்பொருளாகக் கொண்டு இப்பாடல்கள் பாடப்பட்டுள்ளன. மருதக்கலிப் பாடல்கள் தலைவனின் பரத்தையர் தொடர்பினால் கலக்கமுறும் தலைவியின் உணர்ச்சி வெளிப்பாடுகளாகவே பெரிதும் அமைந்துள்ளன. தோழி, பரத்தையர் என்னும் பெண்களும் அவர்களின் மனநிலைகளும் உளவெளிப்பாடுகளுங் கூட மருதக்கலியில் சித்திரிக்கப்படுகின்றன. ஒப்பீட்டளவில் பெண்களும் அவர்களது உணர்ச்சி மோதல்களுமே மருதக்கலியில் பிரதான பேசுபொருள்களாகின்றன. ஆக, சவால் நிறைந்த ஒரு வாழ்க்கைச் சூழலில் பெண்கள் எங்ஙனம் குடும்பக் கட்டமைப்பினைச் சிதையாமற் பேணிக்கொள்கின்றனர் உரிமையுடன் தலைவனது தவறுகளை எவ்வாறு சுட்டிக்காட்டுகின்றனர் எவ்வகையில் குடும்ப அங்கத்தவர்களைப் பாதுகாத்துக் கொள்கின்றனர் சமூகத்தில் தங்கள் மதிப்பையும் நற்பெயரையும் எப்படிப் பேணிக்கொள்கின்றனர் என்பதனை விரிவாக ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இவ்வாய்வு விவரண ஆய்வு முறையியலின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. மருதக்கலிப் பாடல்களைப் பகுப்பாய்வு செய்வதற்குப் பகுப்பாய்வு அணுகுமுறையும், அவற்றை மற்றைய சங்க இலக்கியப் பாடல்களுடன் ஒப்பிட்டு நோக்குதற்கு ஒப்பாய்வு அணுகுமுறையும் கையாளப்படுகின்றன. மருதக்கலிப்பாடல்கள் இவ்வாய்வின் முதன்மை மூலாதாரங்களாகக் கொள்ளப்படுகின்றன. மருதத்திணை பற்றியதான ஏனைய சங்க இலக்கியப் பாடல்கள் மற்றும் ஆய்வாளர்களின் கட்டுரை

கள், நூல்களில் உள்ள குறிப்புக்கள் என்பன துணை மூலாதாரங்களாக எடுத்துக்கொள்ளப்படு கின்றன. இக்கட்டுரையின் ஊடாகக் குடும்ப வாழ்க்கையில் பெண்களின் உரிமை, பொறுப்பு என் பவற்றையும் அவர்களின் மாண்பு மிக்க பண்புநலன்களையும் விளங்கிக் கொள்ள முடியும்.

**திறவுச்சொற்கள்:** மருதக்கலி, மகளிர்மாண்பு, கலித்தொகை, சங்கஇலக்கியம், மகளிர்

## அறிமுகம்

"கற்றோர் ஏத்தும் கலி எனச் சிறப்பிக்கப்படும் பெருமை படைத்தது கலித்தொகை. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான இதனுள் கலிப்பா யாப்பினால் அமைந்த 149 பாடல்கள் உள்ளன. இவை திணையடிப்படையில் பாலைக்கலி, குறிஞ்சிக்கலி, மருதக்கலி, முல்லைக்கலி, நெய்தல்கலி எனத் தொகுக்கப்பட்டுள்ளன. கலித்தொகையில் மருதக்கலி மூன்றாவதாக அமைந் துள்ளது. இதில் முப்பத்தைந்து பாடல்கள் உள்ளன. இவற்றை யாத்தவர் மருதன் இளநாகனார். மருதத்திணைப் பாடல்களை அதிகம் பாடியதால் "மருதன்" என்னும் அடைமொழியுடன் இவர் பெயர் பிரசித்தமாகியிருத்தல் வேண்டும். சில ஏட்டுப் பிரதிகளில் இவர் பெயர் "மதுரை மருதன் இளநாகனார்" எனவும் தரப்பட்டுள்ளது (விசுவநாதன் செட்டியார், காசி, 1949:28). ஆய்வாளர்கள் சிலர் மருதக்கலிப்பாடல்கள் மருதன் இளநாகனார் உள்ளிட்ட பலரின் பாடற்தொகுப்பு எனவும் கருதுகின்றனர் (இராசமாணிக்கனார், மா, 1968:09). மருதத்திணைக்கேயுரிய ஊடல் ஒழுக் கத்தினை முதன்மைப்படுத்தி இப்பாடல்கள் பாடப்பட்டுள்ளதைக் காணலாம்.

## ஆய்வின் நோக்கம்

மருதக்கலிப்பாடல்கள் வெளிப்படுத்தும் மகளிரின் மாண்புகளை இனங்காண்பதும், அவை அக்கால தனிமனித, குடும்ப, சமூக மேன்மைக்கும் உறுதிப்பாட்டிற்கும் எந்தளவுக்குப் பங்களித் துள்ளன என்பதை ஆராய்வதும் இவ்வாய்வின் நோக்கங்களாக அமைந்துள்ளன.

## ஆய்வு அணுகுமுறை

இவ்வாய்வு விபரண முறையியலின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. இங்கு மருதக் கலிப் பாடல்கள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படுவதுடன் அவை மருதத் திணை சார்ந்த பிற சங்க இலக்கியப் பாடல்களுடன் ஒப்பிட்டும் நோக்கப்பட்டுள்ளன. இதற்கு ஒப்பாய்வு, பகுப்பாய்வு அணுகுமுறைகள் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

## ஆய்வின் மூலங்கள்

இவ்வாய்வின் முதன்மை ஆதாரங்களாக மருதக்கலிப்பாடல்கள் கொள்ளப்படுகின்றன. ஊடல் ஒழுக்கத்தினை உரிப்பொருளாகக் கொண்ட ஏனைய சங்க இலக்கியப் பாடல்களும் மருதத்திணை தொடர்பாக ஆய்வாளர்களால் எழுதப்பட்ட கட்டுரைகள், நூல்கள் என்பனவும் துணையாதாரங்களாகக் கொள்ளப்படுகின்றன.

## ஆய்வின் கருதுகோள்

"மருதக்கலிப்பாடல்கள் வெளிப்படுத்தும் மகளிர் மாண்புகள் தமிழர் பண்பாட்டின் தனித்துவ மான பண்புகளாக அமையும் அதேவேளை குடும்ப, சமூக உறுதிப்பாட்டிற்கும் மேன்மைக்கும் அடிப்படைகளாக அமைந்துள்ளன" என்பது இவ்வாய்வின் கருதுகோளாகும்.

## மாண்பு

மாண்பு என்பது "மாண்" என்னும் அடியாகப் பிறந்த சொல்லாகும். மாண் என்பதற்கு "அழகு", "பெருமை", "மாட்சிமை", "நன்மை" என்ற பொருள்களை கழகத் தமிழ் அகராதி தருகின் றது (1999:75). இதனடிப்படையில் ஒருவருக்கு நிலைத்த சிறப்புக்களையும் பெருமைகளையும்

நன்மைகளையும் தருகின்ற உயர்ந்த பண்புகளே "மாண்பு" என வழங்கப்படுகின்றன. மாண்பு ஒருவரின் எண்ணம், சொல், செயல் என்பவற்றின் ஊடாக வெளிப்படுகின்றது. எண்ணம், சொல், செயல் என்பவை நேரானவையாகவும் தனக்கும் பிறருக்கும் பயனுடையதாகவும் அமையும் போது அங்கு மாண்பு வெளிப்படுகின்றது. இதுவே தனிமனித வளர்ச்சி, குடும்பச் செழிப்பு, சமூக முன்னேற்றம் என்பவற்றுக்கு அடிப்படையாக விளங்குகின்றது. மேலும் அமைதியான, நிறை வான, மதிப்பு நிறைந்த வாழ்க்கை என்பவற்றுக்குத் தளமாகவும் அமைகின்றது. இம் மகத்தான மாண்புகளைச் சமூகத்தில் வளர்ப்பதிலும் நிலைநிறுத்துவதிலும் மகளிரின் பங்களிப்பு மிகை யானது.

**மருதக்கலியும் மகளிரும்**

மருதக்கலிப்பாடல்கள் பெரும்பாலானவற்றில் மகளிரும் அவர்தம் உணர்வுகள், செயல்கள், சிந்தனைகள், பேச்சுக்கள் என்பனவே முதன்மை பெற்றுள்ளன. தலைவி, தோழி, காமக்கிழத்தி, இற்பரத்தை, சேரிப்பரத்தை என்போர் இப் பாடல்களில் பேசப்படும் மகளிராவர். இவர்களுள் தலைவி, தோழி என்போரே பாடல்களில் ஆதிக்கம் பெற்றுள்ளனர். கூற்றுநிலை முக்கியத்து வத்தையும் இவர்களே பெறுகின்றனர். ஏனைய காமக்கிழத்தி, சேரிப்பரத்தை, இற்பரத்தை என் போர் அறிமுக மாந்தரா கவே பாடல்களில் காட்டப்படுகின்றனர். மருதக்கலிப்பாடல்கள் முப்பத் தைந்தினையும் கூற்றுநிலை அடிப்படையில் பாகுபடுத்தி நோக்குகின்றபோது இதனைத் தெளி வாக உணர்ந்து கொள்ளலாம்.

| கூற்றுக்கள் | பாடல் எண்ணிக்கை |
|---|---|
| தலைவன், தலைவி, தோழி கூற்றுக்கள் கலந்தோ அல்லது தனித்தனியே அமைந்தோ வரும் பாடல்கள் | 31 |
| சான்றோர் கூற்றாக அமைந்த பாடல்கள் | 02 |
| குறளன், கூனி என்போர் கூற்றுக்களாக அமைந்த பாடல்கள் | 01 |
| திணைநிலை மயக்கமாய் அமைந்து தோழி கூற்றாக வரும் பாடல் | 01 |

மருதக்கலிப்பாடல்கள் "ஊடலை" உரிப்பொருளாகக் கொண்டவை. தலைவன், தலைவிக்கு இடையில் ஊடல் நிகழ்வதற்குப் பல காரணங்கள் உள்ளன. எனினும் இப்பாடல்களில் தலை வனின் பரத்தையர் தொடர்பே ஊடலின் காரணமாகப் பேசப்படுகின்றது. கற்புநெறிப்பட்ட இல்வாழ் வில் தலைவனின் பரத்தையர் தொடர்பு ஏற்படுத்தும் அதிர்வுகளும், அதனால் தலைவியின் உள் ளத்தில் ஏற்படும் வேதனையும், குமுறல்களுமே மருதக்கலிப்பாடல்களின் பிரதான பேசு பொருள்களாக அமைகின்றன. தலைவனிடத்துத் தலைவி கொள்ளும் ஊடலும் அதன் விளை வான கோபமும் அவள் சிந்தனை, செயல், உணர்வுகள் வழி எவ்வாறு வெளிப்படுகின்றது என் பதை இப்பாடல்கள் தெளிவாகப் பதிவுசெய் துள்ளன. தலைவியின் துன்பத்தினைக் கண்டு தோழி யும் சான்றோரும் இரங்குதலும் கூட மருதக் கலிப் பாடல்களில் எடுத்துக்காட்டப்படுகின்றது. ஆக, மருதக்கலியின் முப்பத்தொரு பாடல்கள் தலைவியின் ஊடல் குறித்தனவாக அமைந்து வருகின் றன அவற்றை பின்வருமாறு பாகுபடுத்தி நோக்க முடியும்.

| சந்தர்ப்பம் | பாடல்களின் எண்ணிக்கை | பாடல் எண்கள் |
|---|---|---|
| பரத்தையர் வீடு சென்று வந்த தலைவனைத் தலைவி ஊடிச் சினந்தது | 09 | 01, 03, 04, 06, 07, 08, 09, 12, 13 |
| பரத்தையர் வீடு சென்று வந்த தலைவனை "எங்கு சென்று வந்தாய்" என தலைவி வினவ, அவன் பொய் கூறவே, அதனைக் கேட்டு ஊடிச் சினந்தது. | 06 | 27, 28, 30, 31, 32, 33 |
| பரத்தையர் வீடு சென்று திரும்பிய தலைவனை ஊடிச் சினந்து பின்னர் ஏற்றுக்கொண்டது. | 06 | 10, 22, 23, 24, 25, 26 |
| பரத்தையர் வீடு சென்று திரும்பிய தலைவனைப் புதல்வனை முன்னிறுத்தி ஊடிச் சினந்தது. | 08 | 14, 15, 15, 17, 18, 19, 20, 21 |
| தலைவனின் பரத்தையர் தொடர்பினை அறிந்து ஊட முயன்றும் முடியாமையைத் தலைவி தோழிக்கு எடுத்துரைத்தது. | 01 | 04 |
| பரத்தையர் வீடு சென்று திரும்பிய தலைவனைத் தோழி வாயில் மறுத்தது | 01 | 05 |

மேலே சுட்டப்பட்டவற்றை நோக்குகின்றபோது தலைவனின் பரத்தையர் நாட்டம் தலைவி யிடத்து ஏற்படுத்துகின்ற சீற்றம், மனக்கிலேசம், துயர், ஏக்கம், எனும் மனவிகற்பங்கள் மருதக் கலிப் பாடல்களில் விரிவாகப் பேசப்பட்டுள்ளமை புலனாகும்.

**ஊடலும் மகளிரும்**

ஊடல் என்பது, தலைவி தலைவன் இடையே ஏற்படும் மனவேறுபாடாகும். இம் மனவேறு பாடு நிரந்தரமானதல்ல. அது இருவரிடையேயும் தோன்றிச் சிறுபொழுது நீடித்துக் கலைந்து போகும் இயல் புடையது. சங்க இலக்கியங்களில் பரத்தையர் தொடர்பினால் தலைமாந்தரிடையே ஏற்படும் மனவேறு பாடே அதிகமாகப் பேசப்படுகின்றது. தலைவனின் பரத்தையர் தொடர்பினை கேட்டும், உணர்ந்தும் அறிந்து கொள்ளும் தலைமகள் சினம், வெறுப்பு, வேதனை, ஏமாற்றம், ஏக்கம் என்பன கலந்த உளநிலையை அடைகின்றாள். இதுவே அவள் தலைவன் மீது கோபமும், சீற்றமும் கொள்வதற்குக் காரணமாக அமைந்து விடுகின்றது. திருமணம் செய்து "குடும்பம்" என்ற அமைப்பிற்குள் வாழும் தலைவிக்கு தலைவனின் பரத்தமை ஒழுக்கம் பெரும் சவாலாகவே விளங்குகின்றது. தலைவனின் பரத்தையர் தொடர்பினைக் கண்டும் காணாதிருக்க அவளால் முடிவதில்லை. அதற்காகத் தலை வனை சினந்து வெறுத்து ஒதுக்கவும் முடிவதில்லை. இரு தலைக் கொள்ளியெறும்பு போன்ற இந்நிலை யினைத் தலைவி எங்ஙனம் கையாளுகின்றாள் என்பதையே மருதக்கலிப்பாடல்கள் சிறப்பாக எடுத்துரைக்கின்றன.

சங்க அகப்பாடல்களில் மருதக்கலிப்பாடல்களில் தான் தலைவனின் பரத்தையர் நாட்டம் பற்றியும் அதனால் உண்டாகும் ஊடல் பற்றியும் அதிகமாகப் பேசப்படுகின்றது. இப்பாடல்கள் குறிப்பிடும் தலைவனது பரத்தையர் தொடர்பு பற்றிய விடயங்களை வெறுமனே இலக்கிய வழக்கு என ஒதுக்கிவிட முடியாது. இவை சமகால சமூகத்தில் அதிகமாகக் காணப்பட்டிருத்தல் வேண்டும். இதனாலே தான் புலனெறியாக்கத்தின் போது இலக்கியத்தில் இவை அதிகம் இடம்பெற்றிருக் கின்றன.

கலித்தொகைப் பாடல்கள் சங்ககாலத்தின் பிற்கூற்றிலேயே தோற்றம் பெற்றன என்பது ஆய்வாளர்களது முடிபு (செல்வநாயகம், வி, 1973:17-18) சங்ககாலத்தின் பிற்பகுதியில் தமிழர் சமூகம் பெருவளர்ச்சி பெற்றிருந்தது. நிலவுடைமைச் சமுதாயமும் அரசியலமைப்பும் அக்காலத்தில் முன்னேற்றங் கண்டிருந்தன. பயிர்ச்செய்கை, வாணிபம், கைத்தொழில் வளர்ச்சி என்பவற்றால் பொருளாதார வளர்ச்சியும் சிறப்பாக அமைந்தது. மக்களின் வாழ்க்கைத்தரமும் வளர்ச்சி கண்டிருந்தது. இத்தகைய சூழலில் இன்பியல் வாழ்வு நோக்கிய உந்துதல் இருந்திருக்கும் என நம்பலாம். அதுமட்டுமன்றி சங்ககாலத்தின் பிற்கூற்றில் சமூகத்தில் பரத்தையர் எண்ணிக்கையும் அதிகம் இருந்துள்ளது (வாசுகி. சொ.2003:198-213). இது குறித்து சங்க அகப்பாடல்களிலே குறிப்புக்கள் பல உள்ளன. அன்றியும் சங்கமருவிய காலத்தில் தோன்றிய அறநூல்கள் பரத்தமையைத் தீவிரமாகக் கண்டிப்பதிலிருந்தும் இதனை ஊகிக்க முடிகின்றது.

தலைவனின் வரையறைகடந்த காமஉணர்வு பரத்தையர் நாட்டத்திற்குக் காரணமாகின்றது. மருதக்கலிப்பாடல்கள் காமக்கிழத்தி, இற்பரத்தை, சேரிப்பரத்தை எனப் பலரை தலைவனின் வரையறைகடந்த காமஉணர்வின் வடிகால்களாகச் சுட்டுகின்றன. மருதக்கலிப் பாடல் ஒன்றில் தலைவி தலைவனைப் பார்த்து "உனக்குரித்தான பரத்தையரின் எண்ணிக்கை ஊரளவினர்" எனக் கூறுகின்றாள் (கலி. மருதம்:03). மேலும் மருதக்கலியிலே பரத்தையர் தலைவனின் வீடுவரை வந்தமை பற்றிய செய்திகள் உள்ளன (கலி. மருதம்: 03, 25, 29, 31, 32). இன்னும் தலைவன் பரத்தையரைத் தன் இல்லத்துக்கே கூட்டி வந்த செய்தியும் மருதக்கலிப் பாடல்களில் உண்டு (கலி. மருதம்:03,25). கலித்தொகைக்கு ஏறத்தாழ சமமான காலப்பகுதியில் தோற்றம் பெற்ற பரிபாடலிலும் இவ்வாறான செய்திகள் இடம் பெறுகின்றன. பரிபாடலில் பரத்தையர் தலைவியின் எதிர்நின்று வாக்கு வாதம் செய்தலைக் காணமுடிகின்றது (பரிபாடல்:12). புலவர்கள் பரத்தையர் தொடர்பையும் அதனால் ஏற்படும் ஊடலையும் புலனெறியாக்கம் செய்யும் போது மிகைப்படுத்தல்களை மேற்கொண்டிருப்பதற்கு வாய்ப்புகளுண்டு. எனினும் அவர்கள் உலகியல் வழக்கில் காணப்பட்ட விடயங்களை முற்றாகப் புறந்தள்ளவில்லை என்பதை மனங்கொள்ளுதல் அவசியம். இவ்வாறு தலைவனின் பரத்தைமை ஒழுக்கம் தனிமனித, குடும்ப, சமூக நிலைகளில் பாதிப்பினை, சலசலப்பினை ஏற்படுத்திய சந்தர்ப் பத்தில் மகளிர் அதனை எவ்வாறு எதிர்கொண்டனர், தம்மையும் தம்மைச் சார்ந்தோரையும் எவ்வாறு பேணிக் கொண்டனர் என்பதில்தான் அவர்களது மாண்புகள் வெளிப்படுகின்றன.

### மகளிர் சினமும் மனக் கிலேசமும்

அமைதியான குடும்ப வாழ்க்கையினைச் சீர்குலைக்கும் செயற்பாடாகத் தலைவனின் பரத்தையர் தொடர்பு அமைந்து விடுகின்றது. இதனால் அதிகம் பாதிப்புறுபவர்கள் பெண்களே. குடும்பத் தலைவியிடம் இருந்து ஆரம்பிக்கும் இப்பாதிப்பு அவளுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட தோழி முதலானவர்களையும் பாதிப்பதனைக் காணலாம். இதுவே அவர்களின் புலம்பலாகவும், பிதற்ற லாகவும், கோபம் நிறைந்த கூற்றுக்களாகவும், ஆற்றாமை நிறைந்த சொல் வெளிப்பாடுகளாகவும், உரையாடல்களாகவும் மருதக்கலியில் வெளிப்படுகின்றன. தலைவனின் பரத்தமை ஒழுக்கம் அறிந்து தலைவி இங்ஙனம் மனக் கிலேசம் உறுவதற்குப் பல காரணங்கள் உள்ளன.

அ. உள்ளப் புணர்ச்சியினால் தலைவனுடன் ஒருயிராய்க் கலந்தவள் தலைவி. திருமணம் செய்து இல்லறம் நடாத்துகின்ற கற்பியல் வாழ்வில் அவனையே கண்கண்ட தெய்வம் எனக் கொண்டவள். தலைவன் மீது அன்பும் உரிமையும் கொண்டு வாழ்ந்தவள். தனது பெற்றோர், உடன்பிறந்தோரிடத்துக் கொள்ளும் அன்புரிமையிலும் பார்க்கத் தலைவன்

மீது அவள் கொண்டிருந்த உரிமையும் நெருக்கம் அதிகமானது. இங்ஙனம் தலைவன் மீது கொண்ட உரிமையை அவள் ஒருகாலத்திலும் மற்றொருவருக்கு விட்டுக் கொடுக்க மாட்டாள். அதுவும் இன்னொரு பெண்ணுக்கு அவ்வுரிமையை விட்டுத் தருவது என்பது கனவிலும் நினைக்க முடியாத ஒன்று. தலைவனுடன் இத்தகைய நெருக்கமும் உரிமையும் பாராட்டி வரும் தலைவி அவன் மற்றொரு பெண்ணுடன் தொடர்பு கொண்டான் என்பதை எப்படிப் பொறுத்துக்கொள்ள முடியும்? அதுவே அவளது கோபம் மனவேதனை, துயரம் என்பன கலந்து கூற்றுக்களாக வெளிப்படுகின்றன (ம.கலி:09).

ஆ. பரத்தையர் தொடர்பில் காமுற்று தலைவன் தலைவியைப் பிரிந்து செல்ல அவ்வேதனையால் அவள் உடலில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. உடல் வாட்டம் அடைகின்றது. (ம.கலி:13), உடல் நிறம் வெளிறியது. (ம.கலி:13), கண்கள் தூங்கவில்லை. (ம.கலி:05), கைகளில் அவள் அணிந்திருந்த தொடிகள் நெகிழ்ந்தன (ம.கலி:34), முகம் களையிழந்தது (ம.கலி:34), அழகு கெட்டது. (ம.கலி:12). அல்குலில் வரியுண்டாயிற்று (ம.கலி: 15). இவை புறத்தே மற்றவர்க்குப் புலப்படத் தொடங்கும் போது ஊரில் அலர் உருவாகியது. தலைவனின் பரத்தையர் தொடர்பினை ஊரவர்கள் பழி தூற்றத் தொடங்குகின்றனர் (ம.கலி:30). இந்நிலையில் தலைவனின் ஒழுக்கத்தையும் தனது இயலாமையையும் ஊரார் பழிப்பினையும் எண்ணிக் கவலை கொள்கின்றாள் தலைவி.

இ. தலைவன் களவின்கண் தலைவியைக் கண்ணுற்றுக் காதல் கொண்ட இடத்தும், பின்பு அவளை வதுவை செய்த போதும் "உனைவிட்டுப் பிரியேன்" எனக் கூறியிருந்தான் (ம.கலி:35,9-10). ஆனால் இப்போது சொன்ன சொல்லை மறந்து பிற பெண்டிருடன் தொடர்பு கொண்டு தன்னை உதாசீனம் செய்தான் என்பதும் தலைவியிடத்து மனத்துன்பமும் குழப்பமும் ஏற்படக் காரணமாக அமைகின்றன. தனக்கு "நம்பிக்கைத் துரோகத்தைத்" தலைவன் செய்து விட்டானே என்ற உள்ளக் கொதிப்பும், "தலைவனை நம்பி நான் ஏமாந்து விட்டேனே" என்ற உணர்வும் அவளை வருத்துகின்றன.

ஈ. தலைவன் தன்னை நீங்கிப் பிறபெண்டிரை விரும்பிச் சென்றமைக்குக் காரணம் தனது இளமை, அழகு என்பன வாடிப்போனமைதான் காரணமா எனத் தலைவி ஐயுறுகின்றாள். இது அவள் உள்ளத்தில் தாழ்வுணர்ச்சியாய் நிலைகொள்கின்றது.. இதுவும் அவள் துயரத் தினை மேலும் மிகுவிக்கின்றது. "தொன்னலம் இழந்தோள், நீ துணை எனப் புணர்ந்தவள் இன்னுறல் வியன் மார்ப" எனவும் (ம.கலி:35,20-21), "காமம் கடை கூட்ட வாழும்நாள் முனிந்தாளை" (ம.கலி:34:13), எனவும் "வேய்நலம் இழந்தோள் கவின் வாட உழப்பாளை" (ம.கலி:34:16) எனவும் வரும் கலிப்பாடல் வரிகள் இத்தொடர்பில் நோக்குதற்குரியன.

உ. மற்றவர் பொறாமைப்படும் அளவிற்கு இல்லறத்தினை நல்லறமாக நடத்தி வந்த சூழல் மாறி, இப்போது பிறர் கண்டு அலர் தூற்றுகின்ற அளவிற்கு தலைவனின் பரத்தையர் தொடர்பு இட்டுச் சென்று விட்டதே என்ற உணர்வும் அவளை துன்பத்திற்குள்ளாக்குகின்றது. சமூகத்தில் அரும்பாடுபட்டு உருவாக்கிக் கட்டிக்காத்து வந்த மதிப்பும் பெருமையும் இதனால் இல்லாமல் போய்விடுமோ என அவள் கலங்குகின்றாள். "பிறரின் ஏளனப் பார்வையும், பழிச் சொற்களும் தன்னையும் குடும்பத்தையும் சுடுமே" எனக் கவலையுறுகின்றாள் (ம.கலி:09). அதனைச் சிந்தியாது பரத்தையர் நாட்டங்கொண்டு திரியும் தலைவனிடத்து அவளுக்குக் கோபம் வருகின்றது.

ஊ. பரத்தையர் வீடு சென்று மீளும் தலைவன் தனது குற்றத்தினை மறைப்பதற்காக ஏராள மான பொய்களைக் கூறுகின்றான். இதனால் தலைவியின் கோபத்தில் இருந்து தப்பி விடலாம் என நம்புகின்றான். தலைவன் கூறும் இப்பொய்களும், பொய்ச் சத்தியங்களும் தலைவிக்கு அச்சத்தினை உண்டாக்குகின்றன. அவனுக்கு ஏதேனும் தெய்வக் குற் றங்கள் இதனால் வந்துவிடுமோ எனக் கவலையுறுகின்றாள் (ம.கலி:26). தலைவனின் நீண்ட ஆயுள், நல்வாழ்வு என்பன தொடர்பான அக்கறை அவள் உள்ளத்தில் ஏற் படுகின்றன. அவை அவள் உள்ளத்தில் கலக்கத்தினை உண்டுபண்ணுகின்றன.

எ. பரத்தையருடன் கூடிய குறிகள் அழியாதிருக்கத் தலைவன் தன் முன்னே வரும் கோல முங் கூடத் தலைவிக்குத் துன்பத்தினை மிகுவிக்கின்றது. அத்துடன் அவளது தன்மானத் தினையும் சீண்டிவிடுகின்றது. பரத்தையரின் மாலைகளில் இருந்து சொரிந்த மகரந் தங்களை மார்பில் சுமந்து வரல் (ம.கலி:07), பரத்தையர் அணிந்த சந்தனம், சாதிலிங்கக் கறையுடன் வருதல் (ம.கலி:07,08), பரத்தையர் செய்த நகக் குறிகள், புலந்து பண்ணிய புண்வடுக்களை உடையவனாதல் (ம.கலி:06), பரத்தையர் தொடி செய்த தழும்புகளைக் கொண்டிருத்தல் (ம.கலி:06) என்பவற்றைக் காணும் தோறும் கோபாவேசப்படுகின்றாள் தலைவி. இக்குறிகள் யாவை எனத் தலைவி கேட்கத் தலைவன் அவற்றுக்கு வேறு காரணங்கள் கூறுவது அவளது சீற்றத்தினை மேலும் மிகுவிக்கின்றது.

ஏ. பரத்தையர் தலைவனைத் தேடித் தலைவியின் வீட்டு வாயிற்கே வந்தமை தலைவியின் துன்பத்திற்கும் கோபத்திற்கும் காரணமாக அமைந்து விடுகின்றது. ஒருகாலத்தில் தலைவி யின் முன்னிற்க அஞ்சி விலகியும் ஒதுங்கியும் போகும் பரத்தையர் இன்று அவள் முன்வந்து நிற்பது அவளது துயரத்தினை மிகுவிக்கின்றது (ம.கலி:32). இத்துயரத்தினை மேலும் மிகுவிப்பது போல் அவர்களது ஏளனப் பார்வை அமைந்து விடுகின்றது. தலைவி யின் பெண்மைக்கே சவால் விடுவாதாக அமைந்த அவர்களது செய்கை அவள் உள்ளத் தில் வேதனையைக் கிளப்ப, அதனைக் கோபமாகத் தலைவன் மீது வெளிப்படுத்து கின்றாள் (ம.கலி:09). தலைவன் பரத்தையரிடம் அடிமையானதே இதற்குக் காரணம் எனக் குறைபட்டுக் கொள்கின்றாள்.

ஐ. தலைவியின் கழிபடர் காம உணர்வும் அவளின் துயரத்துக்கு மற்றுமோர் காரணமாகும் (ம.கலி:03) இதுவரையும் உடனுறைந்த தலைவன் தன்மைவிட்டுப் பிரிந்து செல்வதும் பரத்தையரே கதியென வாழ்வதும் தன்மை மறந்துவிடுவதுமான செய்கை அவளுக்குப் பெருந்துன்பத்தினை அளிக்கின்றது. தலைவன் மீதான அவளது விருப்பம், ஏக்கம், எதிர் பார்ப்பு என்பன மேற்கிளம்புகின்றன. அவன் தன் அருகில் இருத்தல் வேண்டும் என்று எதிர்பார்க்கின்றாள். தன்னுடன் முன்னையதைப்போல் அன்பு பாராட்டி வாழ விரும்புன் றாள். இந்த எதிர்பார்ப்பும் அவள் உள்ளத்தில் வேதனையை ஏற்படுத்துகின்றது.

ஆக, தலைவனின் பரத்தையர் தொடர்பு தலைவியை மட்டுமன்றி அவளைச் சூழ்ந்திருப் போரையும் பாதிக்கின்றது அமைதியான குடும்பவாழ்க்கையில் குழப்பங்களைத் தோற்றுவிக் கின்றது சமூகத்தில் பழிச்சொல் ஏற்படுத்துகின்றது இதுவரை அவர்கள் கட்டிக்காத்து வந்த மதிப் பினைக் கேள்விக்குள்ளாக்குகின்றது. இத்தகைய ஒரு நிலையில் தலைவியும் அவளுடன் நெருங் கிய தொடர்பு கொண்ட தோழி முதலானோரும் எத்தகைய உணர்ச்சி மோதலுக்குள்ளாகின்றனர் என்பதை மருதக்கலிப்பாடல்கள் தெளிவாகக் காட்டுகின்றன. இந்த உணர்ச்சி மோதல்களுக் கிடையிலும் மிக நிதானமாக அவர்கள் எங்ஙனம் செயற்படுகின்றார்கள், குடும்ப அமைப்பினைக் குலையாமல் எப்படிக் கட்டிக்காக்க முற்படுகின்றார்கள், சமூகத்தில் நல் மதிப்பினையும் அபிப்பிரா

யங்களையும் எவ்வாறு தொடர்ந்து பேணிவர முயல்கிறார்கள் என்பதில்தான் அவர்களது திறன்களும் அவற்றுக்கு அடிப்படையான மாண்புகளும் வெளிப்படுகின்றன.

**மாண்புகள் வெளிப்படுதல்**

குடும்பத்தினைக் கொண்டு நடாத்த வேண்டிய தலைவன் மகளிர் இன்பமே பெரிதெனக் கருதி, பரத்தையர் நாட்டம் கொண்டு, தன்னிலை மறந்து நடந்து கொள்ளும் நிலையில் குடும்பக் கடிவாளத் தினைத் தலைவி தன் கையில் எடுத்துக்கொள்கின்றாள். தோழி அவளுக்குப் பக்கபல மாகின்றாள். இதுவரையும் அவர்களுக்குள் உறங்கிக் கிடந்த திறமைகள், ஆளுமைகள் என்பன படிப்படியாக வெளிப்படத் தொடங்குகின்றன.

தன்பொறுப்புக்களை உணராது, குடும்ப மானம், கௌரவம் என்பன பற்றிச் சிந்தியாது நடந்து கொள்ளும் தலைவனை நெறிப்படுத்த வேண்டிய கட்டாயம் முதலில் தலைவிக்கு ஏற்படு கின்றது. தலைவனுடன் முரண்பட்டுக் கொள்வதனால் இதனைச் சாதிக்க முடியாது என்பதை அவள் நன்கு உணர்வாள். உடைமைச் சமுதாயச் சூழலில் தனக்கிருக்கும் உரிமைக்குள்ளும் எல்லைக்குள்ளும் நின்று இதனைச் சாதித்துக்கொள்ள முனைகின்றாள். இதற்காக அவள் கையில் எடுத்துக்கொள்ளும் வழிமுறைதான் ஊடல். தலைவனை ஏசுதல், எச்சரித்தல், அறி வுறுத்தல், அழுது பிதற்றல், ஊடுதல், பணிவாய் எடுத்துரைத்தல், எள்ளல், "நான் யாவும் அறிந் தேன் என்னல்" என்பவற்றின் மூலம் தலைவி தலைவனைத் தன்னிலை உணரச் செய்ய முனைவதை மருதக்கலிப்பாடல்களின் வழி கண்டுணர முடிகின்றது. எடுத்துக்காட்டாகப் பின் வரும் பாடல் வரிகளை நோக்குக.

"புதுவ மலர் தேரும் வண்டு போல் யாழ
வதுவை விழவணி வைகலுங் காட்டினாய்." (ம.கலி:33:2-3)
"முடியுற்ற கோதைபோல் யாம்வாட ஏதிலார்
தொடி உற்ற வடுக்காட்டி ஈங்கும் எம் இல்வருவகை." (ம.கலி:14:22-24)
"பொன் எனப் பசந்தகண் போது எழில் நலம்செலத்
தொல்நலம் இழந்தகண் துயில் பெறல் வேண்டேன் மன்." (ம.கலி:12:12-13)
சுடர்நோக்கி மலர்ந்து ஆங்கேபடின் கூப்பும் மலர்போல் என்
தொடர் நீப்பின் தொகும் இவள் நலம் என்னும் நகையோ தான்" (ம.கலி:13:15-17)

ஆக, கோபம், அழுகை, எள்ளல் என்பவற்றுக்கூடாகத் தலைவனைத் தன்வயப்படுத்த முயல்கின்றாள் தலைவி. இதன் மூலம் தலைவன் தன்னைப் பற்றியும் தன் குடும்பத்தைப் பற்றியும் தனது சுய கௌரவத்தினைப் பற்றியும் சிந்திக்க வைக்க முனைகின்றாள். தலைவனின் தவற்றினைத் தட்டிக்கேட்டல், அறிவுறுத்தல், அவனை மன்னித்து அணைத்துக்கொள்ளுதல் என்பவற்றைத் திறம் படச் செய்து முடிப்பதில் தலைவியின் திறனும் அவளது நற்குணங்களும் மிகத் தெளிவாக வெளிப்படு கின்றன.

தலைவன் மீதான பழியினை நீக்குதல் வேண்டும் என்பதில் தலைவிக்கு இருக்கும் அக் கறை மிகவும் அதிகமாகும். தலைவன் மீது ஊரார் சொல்லும் பழி அவனையும் அவனைச் சார்ந்த தன்னை யும் குடும்பத்தாரையும் பாதிக்கும் என்பதை அவள் நன்கு அறிவாள். பெண்ணின்பமே பெரிதெனக் கருதிய தலைவன் இதனை உணரும் நிலையில் இல்லை. அவனுக்கு இதனை உணரச் செய்தல் வேண்டும் என எண்ணுகின்றாள். இந்நிலையில் நல்மந்திரியாக அவள் செயற் படுவதை மருதக்கலிப் பாடல்கள் காட்டுகின்றன. நிதானத்தோடும், நேரிய சிந்தனையோடும், நம்பிக்கையோடும் தலைவனை அணுகித் தனது மனத்துயர், துன்பம் என்பவற்றை எடுத்துரைப்

பதுடன் ஊரார் பழிச்சொல்லுக் குள்ளாகும் நிலையையும் மெல்ல மெல்லத் தெரிய வைக்கின்றாள். பணிவாய் உரைத்தல், தெளிவுறுத்தல் என்னும் வழிமுறைகள் அவளுக்குக் கைகொடுக்கின்றன. தலைவன் தானே தன்னிலை உணர்ந்து நாணி, பரத்தையர் தொடர்பில் நின்றும் நீங்க வேண் டும் என்ற எதிர்பார்ப்பு அவளிடம் காணப்படுகின்றது.

"ஊரவர் கவ்வை உளைந் தீயாய் அல்கல் நின்
தாரின்வாய்க் கொண்டு முயங்கிப் பிடிமாண்டு
போல் வாய்ப்பதக் காணினும் போகாது..." (ம.கலி:30:14-16)
"அலர் நாணிக் கரந்தநோய் கைம்மிகப் பிறர் கூந்தல்
மலர்நாறும் மார்பினை ஈங்கு எம் இல் வருகை" (ம.கலி:14:17-18)

எனத் தலைவனின் பரத்தைமை நாட்டத்தலால் ஊரில் அலர் எழுந்தமையைத் தலைவி சுட்டிக்காட்டும் பாங்கு நோக்குதற்குரியது.

மருதக்கலிப்பாடல்கள் மகளிரைச் சிறந்த குடும்பத் தலைவியராக அடையாளம் காட்டுகின்றன. பரத்தையர் தொடர்பினை விரும்பித் தனது பொறுப்புக்களை உதாசீனம் செய்து விட்டுத் தலைவன் சென்றுவிட்ட நிலையில் தலைவி குடும்பப் பொறுப்பினை ஏற்றுக்கொள்கின் றாள். குடும்பத்தின் கட்டுக் கோப்பினைக் குலையாது பேணுவது அவளது பெரும் பொறுப்பாகின் றது. புதல்வரைப் பேணுதல், குடும்ப மதிப்பினைக் காப்பாற்ற முயற்சித்தல், தலைவனை மீண்டும் பொறுப்புள்ள குடும்பத் தலைவனாக மாற்றுதல் முதலானவற்றைப் பொறுப்புடன் செய்ய வேண்டி யேற்படுகின்றது. அவளுக்குள் மறைந்திருந்த ஆளுமைகள் வெளிப்படத் தொடங்குகின்றன. தலைவனின் ஒழுக்கக் குறைபாட் டினையறிந்து அவனைத் தலைவி வெறுத்தொதுக்கவில்லை. அவனைத் திருத்தி அரவணைக் கின்றபோதே குடும்பம் குலையாமல் இயங்கும் என எண்ணிச் செயற்படுகின்றாள். அதற்கேற்ற வகையில் தனது சொல், செயல் என்பவற்றை நெறிப்படுத்திக் கொள்கின்றாள் தலைவி. தலைவனின் ஒழுக்கக் குறைபாட்டினைக் கண்டித்துப் பின்னர் ஏற்றுக் கொள்வதாக அமைந்த பின்வரும் பாடல் வரிகள் இத்தொடர்பில் நோக்கத்தக்கன.

"தேர்மயங்கி வந்த தெரிகோதை அந்நல்லார்
தார்மயங்கி வந்த தவறு அஞ்சிப் போர் மயங்கி
நீ உறும் பொய்ச்சூள் அணங்காநின் மற்று இனி
யார்மேல் விளியுமோ கூறு" (ம.கலி:23:18-21)

உலகத்தோடு ஒட்ட நடக்கும் மகளிர் பண்பும் மருதக் கலிப்பாடல்களில் வெளிப்பட்டு நிற் கின்றது. தாம் உண்டு தம் குடும்பம் உண்டு என்ற குறுகிய மனப்பான்மையுடன் மருதக்கலித் தலைவியர் வாழ வில்லை. தம்மைச் சூழவுள்ள சமூகத்தினைப் பற்றியும் அவர்கள் சிந்தித்துள்ள னர். சமூகத்தினைப் புறந்தள்ளித் ஒருவராலும் வாழமுடியாது என்பதை அவர்கள் தெளிவாகவே உணர்கின்றார்கள். அதனால் சமூகத்தில் மதிப்பு, மானம் என்பவற்றுடன் வாழ்வதற்கான வழிவகை குறித்து அவர்கள் சிந்தித்துள்ளனர். அதாவது இப்படித்தான் வாழ வேண்டும் என்ற உலக நியதியை அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். தமது வரம்புநிலையில் நின்று தலைவனை நெறிப்படுத்தி, உலகத்தோடு ஒன்றித்த உயர்வான வாழ்க்கையை வாழ அவர்கள் முனைவது தெரிகின்றது. தலைவனை நோக்கி "மற்றவர் கள் மதிக்க வாழவேண்டும் "அவதூற்றுக்கு இடங் கொடுக்கலாகாது" என அறிவுறுத்தும் அவளது கூற்றுக்களில் இதனைத் தெளிவாகக் காணலாம்.

"ஊரவர் கவ்வை உளைந்தீயாய் அல்கல் நின்
தாரின் வாய்க் கொண்டு முயங்கிப் பிடிமாண்டு

போர் வாய்ப்பக் காணினும் போகாது" (ம.கலி:30:14-16)

இதனையே வாயில் வேண்டிய தலைவனுக்குத் தோழி வாயிலாகவும் தலைவி வலியுறுத்த முயல்கின்றாள் (ம.கலி:05).

பரத்தைக்கும் இரங்கும் பரந்த மனப்பாங்கு மருதக்கலி மகளிரிடமுண்டு. தனது தலைவனைக் கவர்ந்து அவனது ஒழுக்கச் சீர்கேட்டுக்குப் பரத்தை காரணமாகிவிட்டாளே என ஒருபுறத்தில் கவலை யும் சீற்றமுங் கொள்ளும் தலைவி மறுபுறத்தில் தலைவன் அவளுக்கும் கொடுமை செய்து விட்டானே என எண்ணிப் பார்க்கின்றாள். பரத்தையும் தன்னைப் போல ஒரு பெண்தானே தனக்கிருப்பதான ஆசைகள், எதிர்பார்ப்புக்கள் அவளிடம் இருக்கும் தானே என எண்ணிப் பார்க்கின்ற மனிதநேயம் தலைவியிடம் பிரகாசிக்கின்றது. பெண் ஒருத்தியின் துன்பத்தினை மற்றோர் பெண் விளங்கிக் கொண்டு அவளுக்கு ஆதரவாக விளங்குவதற்கு மருதக்கலிப்பாடல்கள் மிகச் சிறந்த எடுத்துக்காட்டு களாகும்.

"நின் அணங்குற்றவர் நீ செய்யும் கொடுமைகள்
என்னுழை வந்து நொந்து உரையாமல்..." (ம.கலி:12:14-15)

என வரும் பாடல் வரிகள் நோக்கத்தக்கன. தலைவிக்கு அடுத்தநிலையில் மருதக்கலிப் பாடல்களில் தோழி பெற்றிருக்கும் முதன்மை குறிப்பிடத்தக்கது. அமைதியான குடும்பவாழ்க்கை தலைவனின் பரத்தையர் தொடர்பினால் குலைந்து போவது கண்டு தலைவிக்கு அடுத்த நிலையில் கவலை கொள்பவளாகத் தோழி காட்டப்படுகின்றாள்.

"வாராய் நீ துறந்தனலின் வருந்திய எமக்கு ஆங்கே
நீர் இதழ் புலராக்கண் இமை கூம்ப இயைபவால்
நேரிழை நல்லாரை நெடு நகர்த் தந்து நின்
தேர் பூண்ட நெடுநன்மான் தெண்மணி வந்து எழுப்புமே" (ம.கலி:05:15-18)

தலைவியின் துன்பத்தினைத் தன் துன்பம் போல் உணர்தல், அவளுக்கு ஆறுதல் கூறுதல், புதல்வரைப் பேணுதற்கு உதவுதல் என்பவற்றைச் செய்வதுடன் தலைவனின் பரத்தைமைக்கு எதிராகக் குரலும் எழுப்புகின்றாள். மருதக்கலிப் பாடல்களில் தலைவனின் பரத்தையர் தொடர்பினை தோழி இரண்டு விதங்களில் கண்டிக்க முனைவது எடுத்துக்காட்டப்படுகின்றது. ஒன்று, தன்னிடம் வாயில் வேண்டி நின்ற தலைவனிடம் வாயில் மறுத்துரைத்து அவனுடைய தவறையும் தலைவியின் துன்பத்தினையும் சுட்டிக்காட்டித் திருத்த முனைகின்றாள் (ம.கலி:05). மற்றையது, தலைவியைத் தூண்டி தலைவனின் பரத்தைமைக்கு எதிராக அவளைக் குரல்கொடுக்கச் செய்கிறாள்.

"புதுவோர்ப் புணர்தல் வெய்யன் ஆயின்
வதுவை நாளால் வைகலும் அஃதுயான்
நோவேன் தோழி நோவாய் நீ..."(ம.கலி:10:10-12)

எனும் பாடல்வரிகளில் தலைவி தலைவனின் பரத்தமைக்கு எதிராகக் குரல் கொடுக்கும் படி தோழி தன்னைத் தூண்டியதை ஒப்புக் கொள்கின்றாள். குறிப்பாகக் குடும்பம் என்ற அமைப்புச் சிதை யாமலிருக்கத் தலைவிக்குத் தோள் கொடுப்பவளாகத் தோழி மருதக்கலிப்பாடல்களில் காட்டப்படுகின் றமை நோக்கத்தக்கது.

ஆக, மருதக்கலிப்பாடல்களில் மகளிரின் உயர்ந்த பண்புகளாகப் பின்வருவன வெளிப்பட்டு நிற்பதைக் காணமுடியும்.

i. தலைவன், புதல்வர்கள், ஏனைய குடும்ப அங்கத்தவர்கள் என்போர் மீது எல்லையற்ற அன் பும், பற்றும், பாசமும் கொண்டவர்களாக மகளிர் விளங்குகின்றனர்.

ii. தலைவன் தன் பொறுப்புக்களை மறந்தபோது குடும்பத்தினை முன்னின்று தாங்கி, அதன் கட்டுக்கோப்பைச் சிதையாமல் பேணுகின்றனர். இதன் மூலம் தமது தலைமைத்து வப் பண்புகளை வெளிப்படுத்துகின்றனர்.

iii. தலைவன், தோழி, குடும்ப அங்கத்தவர்கள், சமூகம் என்போருடன் கூடிப்பணியாற்றும் திறன் கொண்டவர்களாக உள்ளனர்.

iv. சவால் நிறைந்த சூழலில் தம்பொறுப்பு, எல்லை, நிலை என்பவற்றினை உணர்ந்து தைரி யத்துடன் செயற்படும் திறன் வாய்க்கப் பெற்றுள்ளனர்.

v. பிரச்சினைகளை, முரண்பாடுகளைச் சாதுரியமாக எதிர்கொள்ளும் திறன் இவர்களிடம் காணப்படுகின்றது.

vi. தமது சொல், செயல்களால் தலைவனை அறிவுறுத்தி, குடும்ப நிலையினை உணரச் செய்து தம்வயப்படுத்தும் ஆற்றல் அவர்களிடம் மிளிர்கின்றது.

vii. சொற்களை அளவறிந்து, இடனறிந்து கையாளும் திறனை அவர்களிடம் காணமுடியும். இதனை நோக்கும் போது அவர்களின் அனுபவம், அறிவாற்றல் என்பன தெளிவாக வெளிப்படுகின்றன. புதல்வனை முன்னிறுத்தி அவள் தலைவனைக் கண்டிக்கும் பாடல் கள் இத்தொடர்பில் நோக்குதற்குரியன.

viii. தலைவனைக் கடிதோச்சி மெல்ல எறிந்து மன்னித்துக் கொள்ளும் பண்பும் அவர்களிடம் காணப்படுகின்றது.

ix. பிறர் துன்பத்தினைத் தம் துன்பம் போல் எண்ணிப் பார்க்கும் மனிதநேயம் அவர்களிடம் இருக்கின்றது. குறிப்பாகப், பரத்தையரிடத்தும் பிறபெண்டிரிடத்தும் இரக்கம் கொள்ளும் பரந்த உள்ளம் அவர்களிடம் உண்டு. தோழி தலைவியின் துன்பத்தினைத் தன் துன்ப மாக உணர்வதும் இத்தகையதே.

x. கணவனுக்காகத் தன்னைக் காத்துக் கற்புடன் வாழும் திறனும் இவர்களுக்குரியது.

**முடிவுரை**

மருதக்கலிப்பாடல்கள் தலைவனின் பரத்தமை ஒழுக்கம் அது தொடர்பில் தலைமக்களி டையே ஏற்படும் ஊடல் பற்றியதாக அமைந்த போதும் அவற்றினூடாக மகளிரின் உயர்ந்த பண்பு களும் திறன்களும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. சவால் மிக்க சூழலிலும் தம்நிலை இழக்காது துணிவுடன் தம்மையும் தம் குடும்பத்தையும் பேணிக் கொள்ளும் இடங்களில் அவர்களின் பண்பு நலன்கள் துலாம்பரமாக வெளிப்படுகின்றன. சாதுரியமாக சவால்களை எதிர்கொள்ளும் திறமையால் மகளிர் மருதக்கலிப் பாடல்களில் மிகவும் கவனத்திற்குரியவர்களாகின்றனர். அவர் களிடம் சவால்களை எதிர்கொள்ளும் உள்ளுரமும் உயர்ந்த பண்புகளும் மேம்பட்டு நிற்கின்றன. இவ் உள்ளுரமும் உயர்ந்த பண்புகளுமே குடும்ப அமைப்பினைக் கட்டிக்காப்பதுடன் அதன் அச்சாணியாகவும் விளங்குகின்றன. கற்பென்னும் திண்மையுடன் தலைவனை, குடும்பத்தை அரவணைத்து சமூகத்தில் மதிப்புடன் வாழ அவர்களுக்குக் கைகொடுப்பது இத்தகைய உயரிய பண்புகளேயாகும்.

**உசாத்துணை நூல்கள்:**


* கலித்தொகை (1958). பதி. இராசமாணிக்கனார், வள்ளுவர் பண்ணை, சென்னை
* கலித்தொகை நச்சினார்க்கினியர் உரை (1949), பதி. காசிவிசுவநாதன் செட்டியார், பழ.மு, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி.
* கலித்தொகைச் சொற்பொழிவுகள் (1940), தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி.
* கழகத் தமிழ் அகராதி, (1998), தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி.
* பரிபாடல் (1918), பதி. சாமிநாதையர், உ. வே., கமர்ஷியல் அச்சுக்கூடம், சென்னை
* செல்வநாயகம், வி. (1973), தமிழ் இலக்கிய வரலாறு, ஸ்ரீ லங்கா வெளியீடு, இலங்கை.
* வாசுகி, சொ. (2003) மருதத்திணை, ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம்.